**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**OS.292/2022**

பெயர் : தொல்காப்பியன் (DW2) (Cross )

த/க/பெ. :

தேதி : 30.01.2026

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சம்மன் வந்ததா என்றால் வரவில்லை. தாவா சொத்து துடரிபேட்டைக்கு அருகில் உள்ளது. தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் தாவா சொத்து உள்ள இடம் தெரியும். ஆனால் என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் தெரியாது. 120 குழி விஸ்தீரணம் என்று பொறையார் காவல் நிலைய அதிகாரி காவல் நிலையத்தில் சொன்னார்கள். காவல் நிலையத்தில் பேசி தீர்த்து கொள்ளலாம் என்று வரச்சொன்னார்கள். இரண்டு முறை போய் பேசினார்கள். காவல் நிலையத்திலிருந்து எழுத்துமூலமான சம்மன் வரவில்லை. வாய்மொழியாக கூறினார்கள். நான் விவசாயம் பார்க்கிறேன். நான் திருக்கடையூரில் வசிக்கிறேன். தாவாச்சொத்து உள்ள இடத்தில் நான் வசிக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் அமிர்தலிங்கம் செட்டியாருக்கு சொந்தமானதா என்றால் அது குறித்து தெரியவில்லை. பொன்னுசாமி எனது நண்பர் 20 ஆண்டுகளாக பழக்கம். பொன்னுசாமி திருக்கடையூரில் மருத்துவமனையில் ஆய்வாளராக வேலை பார்த்தார். எங்கள் ஊரில்வேலை பார்த்த வகையில் பொன்னுசாமியை தெரியும் என்றால் சரிதான் .அவர் எங்கள் குடும்ப நண்பர். வாதியை தெரியும். சமூகத்தில் அந்தஸ்த்து உடையவர் என்றால் பொருளாதரத்தில் மேலானவர். 30.07.2020 ல் தாவாசொத்தை பொன்னுசாமி வகையாறவிடமிருந்து வாதி கிரயம் வாங்கியுள்ளார் என்றால் 100 குழி வாங்கினார் 20 குழியை பிறகு வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார். தாவா சொத்து பூமியில் 13-5 ஏர்ஸ் உள்ளது என்றால் 120 குழி என்று பட்டா வழங்கியுள்ளார்கள். தாவாச்சொத்தின் கிரய மதிப்பு ரூ.28,000/- என்று வா.சா.ஆ.1ல் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து சர்வே எண்ணின் வீஸ்தீரணம் வா.சா.ஆ.8 ல் 13.5 ஏர்ஸ் விஸ்தீரணம் உள்ளது என்றால் சரிதான். என் பிரமாண வாக்குமூலத்தில் குழி 1க்கு 7,000/- என்று 8 லட்சத்து நாற்பாதியரம் என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. 8 லட்சத்து 40,000/- என்று

பேசப்பட்டதற்கான ஆவணம் எதுவும் நான் பார்க்கவில்லை. 3 லட்சத்து 40,000/- கொடுத்ததாக சொல்வது தவறு என்றாலும் கிரயத்தொகையை 28,000/- மட்டும்தான்என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை. தாவாச்சொத்தை பொறுத்து கிரயம் பேசும்போது நான் இல்லை என்றால் சரியல்ல. கிரயம் பேசுமத்போது நான்இருந்தேன். பணம் பட்டுவடா செய்தபோது நான் இல்லை. என் நண்பருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாக்கிதொகை 5 லட்சம் ரூபாய் தரவேண்டுமென்று பொய்யாக சொல்லுகிறேன் என்றால்சரியல்ல. நானும் பிரதிவாதியும் எம்.கே.பி பிரிக்ஸ் அலுவலகத்திற்கு சென்றது எப்போது எந்த தேதியில் பேசினோம் நாங்கள் செல்லவில்லை. வெளியே போங்கடா நாய்களே என்று என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான்.ஆனால் காவல்நிலையத்தில் அவ்வாறு கூறினார். வாதிதான் காவல்நிலையத்தில் அவ்வாறு கூறினார். என்னை அடிக்க வந்தார். அது தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. வாதி என்னை மிரட்டியதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவமானப்படுத்தியாக வாதி வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியும். பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ரிட் மனுவில் நான்தரப்பினரா என்பது தெரியவில்லை. காவல்ங நிலைய விசாரணையில்தவறான புகார் என்று முடிக்கப்பட்டது என்பது பற்றி தெரியவில்லை. வாதிக்கு பிரதிவாதி அடிக்கடி தொந்தரவு கொடுப்பதால் வழக்கில் கோரியபடி நஷ்டயீடு வழங்க கடமைப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. வாதி அவ்வாறு இழப்பீடு தரவேண்டியது இருந்தால் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்திருக்க கூடும் என்றால் பிரதிவாதி இழப்பீடு கேட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளார். என் நண்பருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.